# திருக்குறள் செம்மல் ந.மணிமொழியனார் இரண்டாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி









உலகத் திருக்குறள் பேரவையின் பொதுச் செயலாளரும் நியூ காலேஜ் ஹவுஸ் மேனாள் மேலாண்மை இயக்குநரும், தமிழ்நாடு ஆயிரவைசிய மேனாள் தலைவருமான, திருக்குறள் செம்மல் ந.மணிமொழியனார் அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவேந்தல் கூட்டம் மதுரை நியூ காலேஜ் ஹவுஸ் வளாகம் மணிமொழியனார் அரங்கில் 13.11.2018 அன்று நடைபெற்றது.

நிகழ்ச்சிக்குப் பேரவை மதிப்புறு தலைவர் திரு.கார்த்திகேயன் மணிமொழியன் தலைமை தாங்கினார். விநாயகா மிஷன்ஸ் இயக்குநர் டாக்டர் அனுராதா கணேசன், தொழிலதிபர் டி.ஆர்.ஜி.குணசேகரன், டாக்டர் அரிவாசகம், தமிழ்நாடு ஆயிரவைசியர் சங்கப் பொதுச்செயலாளர் டாக்டர்.ஜெயராம், மதுரைத் தமிழ்ச் சங்க அறங்காவலர் திரு.மோகன் காந்தி ஆகியோர் முன்னிலை வகித்துப் புகழுரை வழங்கினார்கள்.

பேரவை மாவட்டத் தலைவர் கவிஞர்.கா.கருப்பையா தொடங்கி வைத்தார், செயலாளர் கவிஞர் மார்ஷல் முருகன் வரவேற்று மணிமொழியனாரின் பொது வாழ்வின் சிறப்புக்களை நினைவு படுத்திப் பேசினார்.

மணிமொழியனார் திருவுருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி மதுரை மேனாள் மேயர் குழந்தைவேலு, மதுரை மாநகர் மாவட்டத் திமுக பொறுப்பாளர் மேனாள் சட்ட மன்ற உறுப்பினர் தளபதி.பேராசிரியர் இரா.மோகன், மதச்சார்பற்ற ஜனதாதளப் பொதுச் செயலாளர் க.ஜான்மோசஸ், எழுத்தாளர் மதுரை இளங்கவின், மேனாள் காவல் துறை உயர் அதிகாரி திரு.காசிம், புலவர்.ஆறுமுகம், பேராசிரியர் இ.கி.ராமசாமி, அ.கி.செ.திருமாவளவன், சபுரா பீவி, சொ.கு.முருகேசன், முனைவர்.திருமதி யாழ்.சந்திரா, ஊடக எழுத்தாளர் திரு. இந்திரா சௌந்தரராசன் உட்பட ஏராளமான தமிழறிஞர்கள், கவிஞர்கள் கலந்து கொண்டு புதழஞ்சலி

செலுத்தினர். நிகழ்ச்சியை பேரவைச் செயலாளர் கவிபாரதி ஆர்.அசோக்ராஜ் தொகுத்து வழங்கினார். நிறைவாக முனைவர் தா.கு.சுப்பிரமணியன் அவர்கள் “திருக்குறளில் வைணவம்” என்ற தலைப்பில் உரையாற்றினார்.

திருக்குறள் செம்மல் மணிமொழியனார் குடும்பத்தினர் சார்பில் நன்றி கூறப்பட்டது.








திருக்குறள் செம்மல்
மணிமொழியனார்
திருக்குறள் செம்மல்


திருக்குறள் செம்மல்
ந. மணிமொழியனார்




திருக்குறள் செம்மல்
ந. மணிமொழியனார்
இரண்டாம் நினைவேந்தல்


திருக்குறள் செம்மல்
ந. மணிமொழியனார்
இரண்டாம் நினைவேந்தல்


திருக்குறள் செம்மல்
ந. மணிமொழியனார்
இரண்டாம் நினைவேந்தல்




திருக்குறள் செம்மல்
ந. மணிமொழியனார்
அவர்களின்
இரண்டாம்


திருக்குறள் செம்மல்
ந. மணிமொழியனார்